1990 ஆகஸ்ட் 23]

திரு. எஸ். எஸ். தென்னரசு ; பேரவைத் தலைவர் அவர்களே கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு பயிற்சி பள்ளி என்று அறிவித்திருக்கிறார்கள். இப்போது இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு விட்டது. சென்ற ஆண்டு கிழக்கு இராமநாதபுரத்திற்கு ஒரு பயிற்சிப்பள்ளி வேண்டுமென்று கேட்டு விண்ணப்பித்து இருந்தோம். அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூரில் ஒரு பயிற்சி நிலையம் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடம் இப்போது விபரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் கேட்டது கிழக்கு இராமநாதபுரம்.

அணைத் திட்டங்கள்.

* 566—திரு. ஆர். ஈஸ்வரன்:

திரு. சு. குருநாதன்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோம்பையார் அணைத் திட்டம், உள்ளார் அணைத் திட்டம், கோட்டமலையார் அணைத் திட்டம், வாழமலையார் திட்டம் ஆகியவைகளை நிறைவேற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

9-40 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோம்பையாறு அணைக்கட்டுத் திட்டம் பொருளாதார அடிப்படையில் பயன் தராது என்பதால் ஏற்கனவே கைவிடப்பட்டது. உள்ளார் அணைக் கட்டுத் திட்டத்திற்கு வனப்பகுதி நிலங்கள் தேவைப்படுகின்றன. ஆய்வுப் பணிகளைத் தொடங்குவதற்காக வனத் துறையின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோட்டமலையார்

அணைக்கட்டுத் திட்டத்திற்கான நிலங்களைக் கையகப்படுத்தும் செயலாக்கத்தை எதிர்த்து பாதிக்கப்பட்ட சிலர் வழக்கு தொடுத்திருக்கிற காரணத்தால் அந்த வேலையும் அப்படியே நிற்கிறது, வாழமலையார் அணைக்கட்டுத் திட்டத்திற்கான மதிப்பீட்டை தயாரித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 4 அணைத் திட்டத்தில் உள்ளார் அணைத் திட்டம் ஒரு முககியமான பெரிய திட்டம். சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி ஏற்படக்கூடிய திட்டம். இந்தத் திட்டம் ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு, மதிப்பீடு தயார்செய்யப்பட்ட நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நேரடியாக அங்கே வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை வருகிற ஆண்டிலாவது எடுத்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டம் குறித்து ஓர் ஆய்வு நடத்த வேண்டும். ஆய்வு செய்வதற்கே வனத் துறையினர் பொதுப் பணித் துறையினரை வனத்திற்கு உள்ளே விடமாட்டேன் என்கிறார்கள். அப்படி போவதானால் ஏற்படும் இழப்புக்கு பொதுப் பணித் துறை நட்டஈடு தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவேதான், பொதுப் பணித் துறையின் தலைமைப் பொறியாளர் இதை அரசே வனத் துறையிடம் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். எனவே அரசும் வனத் துறையிடம் கேட்டிருக்கிறது. ஆய்வு நடத்துவதற்கு உள்ளே செல்ல அனுமதியுங்கள் என்று கேட்டிருக்கிறோம். பொதுவாகவே அணைக் கட்டுவதில் இருக்கிற மிகப் பெரிய சிரமமே நிதி என்று கூட சொல்லமாட்டேன், வனத் துறையுடன் போராடுகிற அந்தப் போராட்டம்தான் மிகப் பெரிய போராட்டமாக இருக்கிறது. இந்தச் சட்டத் திட்டங்களை மாற்றியமைத்தால் ஒழிய பெரிய அணைத் திட்டங்களைக் கொண்டு வருவது மிகக் கடினமாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம். இருந்தாலும் வனத் துறையின் அனுமதியைப் பெற்று இன்றைக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். காரணம் இந்தத் திட்டம் சாதகமான ஒரு திட்டம் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது.

துணை மின் நிலையம் அமைத்தல்.

*8294—திரு. எம். சீரங்கன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?